தேவிகாபுரம் பெரியநாயகியம்மன் கோயிலில் மழை வேண்டி லட்சார்ச்சனை பூஜை

■ சேத்துப்பட்டு, ஜூலை 18-

சேத்துப்பட்டு அடுத்த தேவிகாபுரம் பெரியநாயகி அம்மன் கோயிலில், உலக நன்மைக்காகவும் போதிய மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டியும், கோயில் திருப்பணிகள் விரைவில் நிறைவடைந்து மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடக்கவேண்டியும் கடந்த 21 நாட்களாக சிறப்பு யாகங்கள் நடத்தப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக, கணபதி ஹோமம், மகாலட்சுமி ஹோமம், நவகிரக சாந்தி ஹோமம், அஸ்திர ஹோமம் உள்ளிட்ட சிறப்பு ஹோமங்கள் தினமும் வேத மந்திரங்கள் முழங்க விமரிசையாக நடத்தப்பட்டது. யாகங்களின் நிறைவாக, கோயிலில் நேற்று சிறப்பு ஏகதின லட்சார்ச்சனை நடந்தது.

தலைமை சிவாச்சாரியார் குருபிரசாத் முன்னிலையில், 11 சிவாச்சாரியார்கள் ஒன்று கூடி, வேத மந்திரங்கள் மற்றும் அம்மனின் திருநாமங்களை முழங்க பெரியநாயகி அம்மனுக்கு லட்சார்ச்சனை செய்து சிறப்பு பூஜைகள் நடத்தினர். லட்சார்ச்சனையின்போது, அம்மனின் மூலவர் மற்றும் உற்சவமூர்த்திகளுக்கு குங்கும், விபூதி, மற்றும் வாசனை மலர்களால் அர்ச்சனைகள் செய்யப்பட்டன. ஒரு லட்சம் முறை அம்மனின் போற்றிகள் மற்றும் மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டு, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. விழாவையொட்டி, உற்சவர் பெரியநாயகி அம்மனுக்குப் பட்டு உடுத்தி, சிறப்பு மலர் மாலைகள் மற்றும் தங்க, வைர ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு, சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். கற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த திரளான பக்தர்கள் அம்மனை தரிசித்து வழிபட்டனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம், குங்குமம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை கோயில் விழாக்குழுவினர் மற்றும் தேவிகாபுரம் ஊர் மக்கள் செய்திருந்தனர்.

தேவிகாபுரம் பெரியநாயகி அம்மன் கோயிலில் நடந்த ஏகதின லட்சார்ச்சனையையொட்டி, பக்தர்களுக்கு அருள்பாலித்த உற்சவர்.

அம்மன் நெற்றியில் மூன்றாம் பிறை

■ வெம்பாக்கம், ஜூலை 18-

வெம்பாக்கம் அருகே உக்கல் கிராமத்தில் அமைந்துள்ள காமாட்சி அம்மன் கோயிலில் அமாவாசை முடிந்ததும் மூன்றாம் நாளில், அம்மனின் முகத்தில் மூன்றாம் பிறை விழும் நிகழ்வு நடக்கும். இதை முன்னிட்டு, நேற்று முன்தினம் மாலை வேள்வி பூஜையை, ஆலயகுரு சங்கர் குருஜி நடத்தினார். தொடர்ந்து, கலச புறப்பாடுக்குப் பின்னர் மூலவர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும் நடந்தது.

அப்போது, அம்மன் நெற்றியில் மூன்றாம் பிறை தோன்றும் காட்சியை, திரளான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.



உக்கல் காமாட்சி அம்மன் கோயிலில் மூன்றாம் பிறை தோன்றும் நிகழ்வில் பக்தர்களுக்கு அருள்பாலித்த மூலவர்.

ஆரணி வேம்புலியம்மன் கோயில் ஆடி வெள்ளி திருவிழாவில் புஷ்ப பல்லக்கை மேல்மருவத்தூர் பங்காரு அடிகளாரின் மகன் சின்னவர் அம்மா தொடங்கி வைத்தார். அருகில் விழாக்குழு தலைவர் கஜேந்திரன் உட்பட பலர். (உள்படம்) அம்மன் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு புஷ்ப பல்லக்கில் அருள்பாலித்தார்.

வேம்புலியம்மன் கோயில் ஆடி வெள்ளி விழா

அதிநவீன புஷ்ப பல்லக்கில் அம்மன் உலா

■ ஆரணி, ஜூலை 18-

ஆரணி கோட்டை வேம்புலியம்மன் கோயிலில் 53வது ஆண்டு ஆடி வெள்ளி திருவிழா நேற்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

காலையில் சிவாச்சாரியார்கள் சிறப்பு வேதமந்திரங்கள் ஓதி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்தனர். பின்னர், வேம்புலியம்மன் வண்ணமலர்களால் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

அப்போது மகாதீபாராதனை காண்பிக்கப்பட்டது. 9 மணியளவில் கமண்டல நாகநதி கரையில் இருந்து பூங்கரகம் ஜோடிக்கப்பட்டு மேளதாளத்துடன் ஊர்வலமாக கோயிலை சென்றடைந்தது. இதையடுத்து, பெண்கள் தங்கள் வீட்டில் படைக்கப்பட்ட கூழ் கொண்டு வந்து கோயில் அருகில் வைக்கப்பட்ட கொப்பரையில் ஊற்றினர்.

மதியம் கூழ்வார்க்கும் திருவிழா நடந்தது. இரவு வேம்புலியம்மன் மற்றும் பரிவார மூர்த்திகள் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு அதிநவீன புஷ்பபல்லக்கில் அமர்த்தப்பட்டன.

சிறப்பு அழைப்பாளராக மேல்மருவத்தூர் பங்காரு அடிகளாரின் மகன் சின்னவர் அம்மா மற்றும் ரத்தினகிரி பாலமுருகனடிமை சாமிகள், கலவை சச்சிதானந்த சாமிகள், விழாக்குழு தலைவர் கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு புஷ்ப பல்லக்கை தொடங்கி வைத்தனர். பல்லக்கு நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக கோயிலை சென்றடைந்தது. முன்னதாக சிறப்பு நாதஸ்வரம், தனிதவில் இசைக்கச்சேரி, தாரை, தப்பட்டை, ஒயிலாட்டம், கிராமிய கலைநிகழ்ச்சிகள், நாரிக்டோல், சென்டுகாவடி ஆட்டம், சிக்காட்ட நிகழ்ச்சி உட்பட பல்வேறு கலை நிகழ்ச்சியுடன் வாண வேடிக்கை நடந்தது. தொடர்ந்து, இன்று (18ம் தேதி) இரவு கோட்டை மைதானத்தில் சினிமா பாடல்கள் உள்ளிமேனன், மகாலிங்கம், சின்னத்திரை தவசிலி, திவினேஷ் ஆகியோர் பங்கேற்கும் இன்னிசை கச்சேரி நடக்க வுள்ளது.

ஏற்பாட்டை விழாக் குழு தலைவர் கஜேந்திரன் தலைமையில் நிர்வாகிகள் செய்கின்றனர்.

செங்கம் அடுத்த முல்லை நகரில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியை, எம்எல்ஏ வேலு தொடங்கி வைத்தார்.

செய்யாறு வருவாரா புதிய கலெக்டர்?

■ செய்யாறு, ஜூலை 18-

திருவண்ணாமலை மாவட்டத்தின் கலெக்டராக வந்தனா கார்க், ஜூன் மாதம் முதல் வாரத்தில் பொறுப்பேற்றார். செய்யாறு கோட்டத்தில் செய்யாறு, வந்தவாசி, வெம்பாக்கம், சேத்துப்பட்டு என 4 தாலுகாக்கள் உள்ளன. புதியதாக பொறுப்பேற்ற கலெக்டர், போளூர் ஜமாபந்தி அலுவலராக சில நாட்கள் கணக்கு தணிக்கை செய்தார். பின்னர், நேற்று (17ம் தேதி) வரை திருவண்ணாமலை கோட்டத்துக்குட்பட்ட பகுதிகளிலேயே பணிகளை பார்த்து வருவதாக கூறப்படுகிறது.

பொறுப்பேற்று 30 நாட்களுக்கு மேலாகியும் செய்யாறு கோட்டத்துக்கு இன்னும் கலெக்டர் முகாம் வரவிலையே என விவசாயிகளும் மக்களும் கோரிக்கைகளோடு காத்திருக்கின்றனர்.

மக்கள் எதிர்பார்ப்பு

உழவர் அலுவலர் தொடர்பு திட்தை ரத்து செய்யக்கோரி திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகம் முன்பு அர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு தோட்டக்கலை அலுவலர்கள் கூட்டமைப்பினர்.

குடிநீர் பைப்லைன் அமைக்க செங்கம் எம்எல்ஏ பூமிபூஜை

■ செங்கம், ஜூலை 18-

செங்கம் நகராட்சி, நடுஆனைமங்கலம் பகுதியில் 20 லட்சம் ரூபாய் செலவில் குடிநீர் பைப்லைன் அமைக்கும் பணி, திருவள்ளுவர் நகரில் 10 லட்சம் ரூபாயில் கழிவுநீர் கால்வாய், முல்லை நகரில் 7 லட்சம் ரூபாய் மதிப்பில் கழிவுநீர் கால்வாய் ஆகியவற்றை அமைக்க பூமி பூஜை நடந்தது. இதில் எம்எல்ஏ வேலு கலந்து கொண்டு பூமிபூஜை போட்டு, பணியை தொடங்கி வைத்து பேசியதாவது:

ஆனைமங்கலம் பகுதியில் நீண்ட நாட்களாக குடிநீர் பிரச்னை உள்ளதாக மக்கள் கோரிக்கை விடுத்தனர். அதன் அடிப்படையில், பைப்லைன் அமைத்து தடையில்லா குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் திருவள்ளுவர் நகர், முல்லை நகர் பகுதிகளில் புதியதாக உருவாகியுள்ள குடியிருப்புகளுக்கு கழிவுநீர் கால்வாய்கள் இல்லை. எனவே, கழிவுநீர் கால்வாய்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்போது பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்கள் பணியை தரமான முறையில் குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும். இவ்வாறு கூறினார். உடன் அரசு ஒப்பந்ததாரர் ராஜி, நகராட்சி துணை சேர்மன் ஜோதி, கவுன்சிலர் மீனா சம்பத், அதிமுக நகர செயலாளர் ஆனந்தன் மற்றும் நகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர்.

தோட்டக்கலை அலுவலர்கள் ஆர்ப்பாட்டம்

■ திருவண்ணாமலை, ஜூலை 18-

திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் 2.0 திட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் மாவட்ட தலை நகரங்களில் தமிழக தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் சங்கத்தின் கூட்டமைப்பினர், நேற்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன்படி, திருவண்ணாமலை கலெக்டர் அலுவலக வாசலில் மாவட்ட தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கழுத்தில் காய், கனி மாலைகளை அணிந்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆரணி எஸ்எஸ்எஸ் மகளிர் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்பு தொடக்க விழாவில் எம்எல்ஏ ஜெயசுதா பேசினார். அருகில் கல்லூரி நிறுவனர் நடராஜன் உட்பட பலர்.

எஸ்எஸ்எஸ் மகளிர் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்பு தொடக்கம்

ஆரணி எம்எல்ஏ பங்கேற்பு

■ ஆரணி, ஜூலை 18-

ஆரணி அடுத்த விண்ணமங்கலம் கிராமத்தில் செயல்படும் எஸ்எஸ்எஸ் மகளிர் கல்லூரியில் 5வது ஆண்டு தொடக்கம் மற்றும் முதலாமாண்டு வகுப்பு தொடக்க விழா, கல்லூரி நிறுவனர் நடராஜன் தலைமையில் அறக்கட்டளை நிர்வாகிகள் தோலட்கமி, சரவணன், செல்வம், சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் விஜயலட்சுமி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக ஆரணி எம்எல்ஏ ஜெயசுதா கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்து, பேசியதாவது:

நான் படிக்கும்போது எண்ணங்களை சிதறவிட எந்தவித இடையூறும் இல்லை. தூர்தர்ஷன் டிவியில் வாரம் ஒருமுறை ஒளியும் ஒலியும் மட்டும் தான் பார்ப்பேன். பிளஸ்2 முடித்தவுடன் கல்லூரி படிப்புக்காக வேலூர் தனியார் கல்லூரியில் சேர்ந்தேன். ஆரணியில் தமிழ் வழியில் படித்து விட்டு, வேலூரில் ஆங்கில வழியில் பயில ரொம்பமாக இருந்ததால், படிப்பை பாதியில் நிறுத்திவிட்டேன். மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்பதால் அரசியலில் நுழைந்து போளூர், ஆரணி எம்எல்ஏ ஆனேன். இவ்வாறு பேசினார்.

நிகழ்ச்சியில் பேராசிரியர் பெக்குமார், வணிக நிர்வாகவியல் துறைத்தலைவர் தாமரைசெல்வி மற்றும் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், பெற்றோர்கள், மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

காமராஜர் பிறந்தநாள் விழா

■ வந்தவாசி, ஜூலை 18-

வந்தவாசி நகர காங்கிரஸ் சார்பில் காமராஜரின் பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. மாவட்ட தலைவர் பொன்னையன் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில், கட்சியினர் வந்தவாசி நகரில் உள்ள காந்தி, காமராஜர் மற்றும் அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

மேலும், 'லஞ்சம் தவிர்; நெஞ்சம் நிமிர்' என்ற விழிப்புணர்வு வாசகம் இடம்பெற்றிருந்த பேனரில் மாவட்ட தலைவர் முதலில் தனது கைரேகையைப் பதித்து, மற்றவர்களையும் கைரேகை பதிக்க அழைப்பு விடுத்தார்.

நிகழ்ச்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினர் அப்துல்கலீம், எஸ்சி துறை மாநில துணை தலைவர் பத்தியாபுரம் அன்புதாஸ், நகரப் பொறுப்பாளர் ஜமாலுதீன், வட்டார தலைவர்கள் பார்த்திபன், குணசேகரன், தேசூர் டவுன் பஞ்.கவுன்சிலர் ராஜபாண்டியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வந்தவாசியில் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு காங்கிரஸ் மாவட்ட தலைவர் பொன்னையன் மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். உடன் மாநில பொதுக்குழு உறுப்பினர் அப்துல்கலீம் உட்பட நிர்வாகிகள்.

திரு. அப்பா அவர்களின் 23-ம் ஆண்டு ஆராதனை விழா

திரு. அப்பா அவர்களின் சாதாரணமை நிறுவனர் 23-ம் ஆண்டு ஆராதனை விழா

இயற்கை வளாண்மையை எமக்கு கற்பித்த

ஜெர்மனியின் நம்மாழ்வாரே, அப்பாவே...!

மாண்புமிகு மரங்களின் மகத்துவத்தை எமக்கு போதித்த புத்தனும் நீ!
மதங்களை கடந்து மனிதருள் புனிதராய் வாழ்ந்தவர் நீ!
உலகில் 6வது அதிசயம் நீ!
உம் ஆசீயை என்றும் வேண்டுகிறோம்
அருள் புரிவாய் அப்பா...!

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
பிறந்த தர்மமே வெல்லும்..!

இயற்கையை காக்க என்றும் உங்கள் வழியில்...

P.K.தனஞ்செயன் M.Sc.,LLB.,B.Ed.,
வழக்கறிஞர்
சென்னை உயர்நீதிமன்றம்

இயக்குநர்: ரீடு தொண்டு நிறுவனம்
மண்டல செயலாளர் FEDCOT, மேலாண்மை இயக்குனர்: சுக்கம் அறக்கட்டளை
தலைவர் : பங்களுமலை உழவர் உற்பத்தியாளர் கம்பெனி லிட்.,
திருவண்ணாமலை. செல்: 9442622202.

திரு.அப்பா அவர்களின் 23-ம் ஆண்டு ஆராதனை விழா

இந்து மதத்தின் பெருமையை எமக்கு கூறிய
ஜெர்மனியின் திருக்கயிலாயமே
- அப்பா அம்மா

அனைவருக்கும் வாழ்வளித்தது உங்கள் கரம்
என்றென்றும் போற்றி வணங்கும் எங்கள் சிரம்
தீயவரை விளக்கிடுவோம் புறம்

நீதி நிலைத்திட நீ தருவாய் வரம் - அப்பா அம்மா
நல்ல தீர்ப்பு வரும் விரைவில்...
எங்கள் வாழ்வின் பயணம் நீங்கள் காட்டிய வழியில்...
வெற்றியினை சமர்பிக்கிறோம்
உங்கள் காலடியில்...

என்றும் உங்கள் வழியில்

BN.குமரன் B.Com.BL.,
வழக்கறிஞர்
மேனேஜிங் ட்ரஸ்டி, AEED TRUST. Cell: 9443232099.
AEED TRUST, Tiruvannamalai.

திருவண்ணாமலை கிளை
பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda
15, RR Complex, போளூர் சாலை, திருவண்ணாமலை-606601.
போன் : 04175-250054, Email: tiruvn@bankofbaroda.bank.in, Web : bankofbaroda.bank.in
(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்திக்குறிப்புகளில் வெளியிடப்படும் கருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-பிரிவின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடனீட்டுக் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் வலாந்தீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் ''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்'' என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகாரிப் தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : M/s. Ohm Muruga Wood Works உரிமையாளர் திரு. ஏழுமலை, தெ. 35, 2ஏ2, அவலூர்பேட்டை சாலை, செறியாந்தல், வேங்கிக்கால் அஞ்சல், திருவண்ணாமலை - 606 604. மற்றும் திரு. ஏழுமலை, த/பெ. வெள்ளைசாமி, 666, காலனி, ஆலந்தூர், திருவண்ணாமலை -606702.

Loan A/c.No.36790500001829, நிலுவை தொகை ரூ.12,92,234.62/- மேலும் 13.07.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

Loan A/c.No.36790600006608, நிலுவை தொகை ரூ.5,06,259.32/- மேலும் 13.07.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

13.07.2026 அன்று மொத்த நிலுவை தொகை ரூ.17,98,493.94/-

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை பதிவு மாவட்டம், கடலாடி துணை பதிவு மாவட்டம், செங்கம் தாலுக்கா, ஆலத்தூர் கிராமத்தில் கிராம நத்தம் சர்வே எண். 196, புதிய சர்வே எண். 196/40. இதன் மத்தியில் ஏக்கர் 0.01 ½ சென்டுக்கு 545 சதுரடி அளவுள்ள மேற்பகு மனையில் தட்டோடு வீடு மேற்படி வீட்டுக்கு உள்ள கதவு எண். 666, மின் இணைப்பு எண். 3740 உள்ள மின்இணைப்பு மின்உபகரணங்கள் காப்பந்தொகை அனைத்தும் உட்பட நான்கு எல்லைகள் : கிழக்கில் – ஊமையான் வீடு, மேற்கில் – கே. வடிவேல் வகையறா பொது ரந்து, வடக்கில் – பாண்டுரங்கன் மனை, தெற்கில் –முஞ்சுதனபயன் வீடு. வீட்டின் மொத்த மூப்பளவு 545 சதுரடி.

நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 11,50,000/- டேவணித் தொகை ரூ. 1,15,000/- ஏல உயர்வு தொகை ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் 10.08.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 24.07.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)

டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 10.08.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.bank.in/e-auction மற்றும் BAANKNET.COM என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செல்: 9677075502 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 18.07.2026
இடம் : திருவண்ணாமலை

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/
பேங்க் ஆஃப் பரோடா